விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 333 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 01 வியாழக்கிழமை (17.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

செஸ் வரித் திருத்தம்

## அத்தியாவசிய பொருட்கள் தவிர்ந்த 630 பொருட்களின் விலை உயர்வு

வர்த்தமானி வெளியீடு


(கொழும்பு)

இலங்கையில் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 630இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கான விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் இந்தப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட செஸ் வரியானது நேற்று முன்தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, செஸ் வரியை மீளாய்வு செய்வதற் 11

## சிவப்பு அரிசி, ரின் மீன் பருப்பு விலைகள் குறைப்பு




(கொழும்பு)

நேற்று புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் மூன்று பொருட்களின் விலையை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஒரு கிலோ சிவப்பு அரிசியின் 11

வவுனியா

## காட்டுப்பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கந்தன்குளம்காட்டுப்பகுதியில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மல்லாகத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட குறித்த நபர் 11

மன்னாரில் உள்ள

## காணிப் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(மன்னார்)

மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடெல்ஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளிட்ட குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

மன்னார் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் 11

நட்டஈட்டுடன்

# அரச ஊழியர்கள் சேவை நீக்கப்படலாம்

## அமைச்சர் மகிந்த அமரவீர




*(கொழும்பு)*

*15 இலட்சம் அரச சேவையாளர்களின் எண்ணிக்கை அரச நிர்வாகத்தால் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது. அரச நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்படும் அல்லது சேவையாளர்களுக்கு நட்டஈடு வழங்கி சேவை நீக்கம் செய்ய நேரிடும். வெற்றிடமாகியுள்ள அத்தியாவசிய அரச சேவைகளுக்கான நியமனங்களை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது என விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.*

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தற்போதைய அரசு ஊடாக கிடைக்கும்

பாராளுமன்றில் மகிந்த அமரவீர

(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினைக்கு இந்த அரசாங்கத்தில் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண முடியும்.

தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். கட்சியை பலப்படுத்துவதைவிட இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கம் அவருக்கு உண்டு என விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப் பிரச் 12

## குருநகர் கடலில் மூழ்கி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளார்.

இவ்வாறு பலியானவர் யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அ.ஜான்சன் என்பவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை தனது மருமகனுடன் மீன்பிடித் தொழிலுக்கு 11

வியட்நாமில் மீட்கப்பட்ட

## 306 இலங்கையர்களில் 50 பேர் அரச ஊழியர்கள்

(ஹனோய்)

சட்டவிரோதமாக கடல்வழியாக கனடா செல்ல முயற்சித்த இலங்கையர்கள் 306 பேர் இடைநடுவில் வியட்நாம் கடற்பரப்பில் படகு மூழ்கும் நிலையில் மீட்கப்பட்டு தற்போது வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறு சென்றவர்களில் 76 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படும் நிலையில், 50 11

## வடக்கில் இன்று மர நடுகை

விவசாய அமைச்சு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் 11

செம்மணிக் குளத்தில்

## குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணிக் குளத்தில் குளிக்கச்சென்ற 24 வயது இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி மாயமாகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(4-7,104)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் அனைத்து பாடசாலையிலும் மதிய நேர உணவு

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இனி மதிய நேர உணவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு வழமையை போன்று தேவையான அளவு உணவு கிடைப்பதில்லை என்பதனை அமைச்சர் பாராளுமன்றில் முன்னதாக தெரிவித்துள்ளார்.

இதற்கமையவே மதிய உணவுத் திட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (4.7)


## லான்ட் மாஸ்ரர் தேவை

நல்ல நிலையில் உள்ள லான்ட் மாஸ்ரர் (Land Master) மற்றும் அதனோடு கூடிய பெட்டி, கலப்பை என்பன தேவை. விற்க இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு

077 315 1326


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 - 09 - 1928



இறப்பு 07 - 12 - 2012

(13473)

### அமரர் சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்

திதி : 17.11.2022

தண்ணிழலின் தலைவனாய் தலை நிமிர்ந்து வாழ்ந்த வாழ்க்கை
போதுமென்று அமைதியான இடம்தேடி சென்றுவிட்டாய் அப்பா
இன்று நீயுமில்லை தண்ணிழலும் இல்லை நிலை குலைந்தது என் வாழ்க்கை
தூக்கி வளர்த்த நான் இன்று தூரத்தே நிற்கின்றேன்
தீர்க்கதரிசி நீ தெரிந்தே சென்று விட்டாய்
கதிகலங்கி நின்ற என்னைத் தாங்கும் நிழல் தந்து
தாங்குகின்றான் உன் மைந்தன்
கயவர்களின் களிப்பிற்கு காலம் பதில் சொல்லும் ஐயா
கடந்தகாலம் தனை நினைத்து கண்ணீரில் கரைகின்றேன்
நீ சென்ற இடத்திற்கே விரைந்து நானும் வந்திடுவேன்

மனைவி


## வேலையாட்கள் தேவை

O/L A/L படித்த புடைவை வியாபாரம் பழகிய மற்றும் பழக ஆர்வம் உள்ள பெண் ஊழியர்கள் தேவை.

(13477)

**சிவகணேசன் புடைவையகம்**
**இல.41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.**

## அறை வாடகைக்கு உண்டு


யாழ். நகரில் வைத்தியசாலைக்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு. நோயாளர் பராமரிப்போர், கல்வி கற்போர், பணியாற்றுவோருக்கு உகந்தது.

(13475)

076 296 3944


## மரண அறிவித்தல்

மண்ணில் 27 - 10 - 1941



விண்ணில் 16 - 11 - 2022

### வயிரன் வேலாயுதன்

(ஓய்வுபெற்ற அதிபர்)

திருகோணமலை மூதுரைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரன் வேலாயுதன் அவர்கள் (16.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெய்வானை(ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன், ஸ்ரீதயாபரி(ஆசிரியை), ஸ்ரீசாயிசங்கர், ஸ்ரீசண்முகப்பிரியா (சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் - மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஸ்ரீதயாபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அசோகரட்ணம்(பொறுப்பதிகாரி-மதுவரித் திணைக்களம், சாவகச்சேரி வரணி), ஜெயசீலன் (மொழி பெயர்ப்பாளர்), தேவமனோகரி(அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மாமனாரும் வைஷ்ணவி, டிலன்ஜா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.11.2022 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் வல்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(13476)

திருவேதகம்,
கிறேசிலேன், உடுப்பிட்டி.

077 308 0404 (மகள்)
077 879 2636 (மருமகள்)

தகவல்:
குடும்பத்தினர்

## Invitation for Bids (IFB)
## Office of the Regional Director of Health Services, KILINOCHCHI

1. The Chairman Regional Procurement Committee (RPC), on behalf of Office of the Regional Director of Health Services Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the **table**below.

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

3. Interested bidders may obtain further information from the Office of the Regional Director of Health Services, Kilinochchiand inspect the bidding documents at the addressOffice of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi. From 8.30 am to 3.00 pm.

4. A complete set of Bidding Documents in the English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Director of Health Services, Office of the Regional Director of Health Services,Kandy Road, Kilinochchi, Telephone 021 228 5932/021 222 5719 Fax 021 2285931from **17.11.2022 until 30.11.2022 from 09.00 hrs to 15.00 hrs.** Upon payment of a non-refundable fee of two thousand Rupees. (Rs.2,000.00). The method of payment will be cash.

5. Bids shall be delivered in duplicate to the address at **Chairman, Regional Procurement Committee, Office of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi** on or before**10.00 am** *on* **01stDecember 2022.** Late bids will be rejected. Bids will be opened at the above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

6. Bid shall be valid up to **03rd February 2023.**

7. All bids shall be accompanied by a "Bid-Security, as in the table below.

| Contract No. | Name of the Contract | Estimated Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required (Highways) | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/K/RDHS/PSSP/DH-P/2022 | Improvement of Internal Road at Divisional Hospital – Poonagari | 3.21 | C8 or Above | 35,000.00 | 3.3.2023 | 21 days |

8. The pre-bid meeting will be held on 29.11.2022at 03.00 pm at the Office of the Regional Director of Health Services Office, Kilinochchi Kandy Road, Kilinochchi.

**Chairman**
**Regional Procurement Committee**
**Office of the Regional Director of Health Services,**
**Kilinochchi.**

TP-021 2285719 Fax 021 228 5931
Email:rdhskoc@gmail.com/financerdhskoc@gmail.com

(C-5275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அவசரமாக நிதிப்பாதுகாப்பு தேவை

## ஜி–20 நாடுகளின் தலைவர்கள் கோரிக்கை

(ஜகார்த்தா)

**இலங்கை உட்பட சில நடுத்தர வருமான நாடுகள் எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்து ஜி-20 நாடுகள் குழுவின் தலைவர்கள் கவனம் செலுத்தியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.**

நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தங்கள் கடனை நிர்வ கிப்பதில் சிக்கல்களை எதிர் கொள்வதாக அவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

எனவே, சில நடுத்தர வரு மான நாடுகள் எதிர்கொள்ளும் கடன் நெருக்கடியில் அவசரத் தலையீட்டிற்கு ஜி-20 நாடு களின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதிகாரிகள் மற்றும் தனியார் கடன் வழங்குபவர் கள் உடனடியாக அதற்கு பதில ளிக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பல கடன் வழங்குநர்களிடமிருந்து இலங்கைக்கு அவசரமாக நிதிப் பாதுகாப்பு தேவை என ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்ற தலைவர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை எட்டியுள்ளதால், இந்தப் பாது காப்பு அவசர மாகத்தேவை ப்படுவதாகஅவ ர்கள் மேலும் குறிப்பிட்டுள் ளனர். (நி)

## நாட்டில் தீவிரமடையும் மருந்துத் தட்டுப்பாடு சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான 23 பில்லியன் ரூபாய் நிலுவையை விநியோகஸ்தர்களுக்கு செலு த்த வேண்டியுள்ளதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள் ளது.

அதன் காரணமாக அவர்க ளால் புதிய முன்பதிவுகளை ஏற்க முடியாத நிலை ஏற்பட் டுள்ளதாக சுகாதார அமை ச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மருந்துத் தட்டுப் பாடு ஏற்படுவதற்கு இது பிர தான காரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.

நிலுவையை செலுத்துவத ற்கான நிதியை உடனடியாகப் பெற்றுக்கொடுக்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத் துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## மீண்டும் முட்டைக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

சந்தையில் மீண்டும் முட் டைக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு ள்ளது.

இதனால் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக உண வகங்கள் மற்றும் பேக்கரி உரி மையாளர்கள் தெரிவித்துள் ளனர்.

முட்டைக்கான தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் பண்டி கை காலத்தில் தேவைக்கேற்ப கேக் உள்ளிட்ட தின் பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ள தாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரி வித்துள்ளார். (நி)

## விடுமுறை விண்ணப்பப்படிவங்கள் இணைய வழியில்- அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் அச் சிடும் செலவைக் குறைக்கும் வகையில் விடுமுறை விண் ணப்பப் படிவங்களை இணைய வழி முறையின் மூலம் பூர்த்தி செய்யும் முறையை அறிமுகப் படுத்த தீர்மானிக்கப்பட்டுள் ளது.

அதற்கான நடவடிக்கையை பொதுநிர்வாகம், உள்நாட்டலு வல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு எடுத்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான முன்னோடித் திட்டம் உட் துறை அமைச்சில் தொடங்கப் பட்டுள்ளதாக அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

இந்த முயற்சி வெற்றிய டைந்தால் நாடளாவிய ரீதியில் உள்ள அரச அலுவலகங்களில் குறித்த முறை அறிமுகப்படு த்தப்படும் எனவும் அவர் தெரி வித்தார். (நி)


இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சிதம்பரநாதன் இளங்குன்றன்

{யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் (40 ஆம் அணி)}

பிறப்பு: 08.09.1997 அழிப்பு: 17.11.2020

கொடியோரின் நயவஞ்சகத்தால் உன் திருமுகம் மறைந்து ஆண்டு இரண்டு ஆனாலும் மறையாது உன் நினைவுகள்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



(C-5273)

நிரந்தர முகவரி
நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.

தற்காலிக முகவரி
மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்


## வீதியை விட்டு விலகி விபத்தில் சிக்கிய வான்

### ஒருவர் பலி, 11 பேர் படுகாயம்



(களுத்துறை)

மதுகம- மீகஹதென்ன கல்முல்ல பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற விபத்தில் பெண் ணொருவர் மரணமடை ந்துள்ளார். 11 பேர் படுகாய மடைந்து மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டு ள்ளனர் என மீகஹ தென்ன பொலிஸார் தெரி வித்தனர்.

மகனை வெளிநாட்டு க்கு அனுப்பி வைத்து விட்டு கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலைய த்தில் இருந்து உறவி னர்களுடன் திரும்பிக் கொண்டிருந்த போதே, வீதியை விட்டு விலகி, வான் விபத்துக்கு உள்ளா கியுள்ளது. (நி)


நிலைமாற்றத்திற்கான பயணம்
Journey of Transformation

நாடக விழா
Drama Festival

செம்முகம் ஆற்றுகைக் குழுவின்
மனச்சிறை
சாப்பாட்டு மேசை

கதிரொளி கலைக்கூடத்தின்
புவனா
விடியல்

கட்டணம் இல்லை

நான்கு நாடகங்களின் ஆற்றுகையும் கலந்துரையாடலும்

18.11.2022- வெள்ளிக்கிழமை
மாலை-3.30
பண்டார வன்னியன் மகாநாட்டு மண்டபம்,
மாவட்டச் செயலகம்- முல்லைத்தீவு.

அனைவரும் வருக

(அ-5232)

TRANSFORM


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இலங்கை விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2022 இற்கான பாடசாலை ரீதியிலான கராத்தே போட்டி இம்மாதம் 4,5,6 ஆம் திகதிகளில் கண்டி உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்ற போட்டியில் செஞ்சோலை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த கிளி/மத்திய கல்லூரி மாணவன். ஜெ.துளசிமாறன் (20 வயது 67kg க்கு உட்பட்ட பிரிவு) குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.




இலங்கை விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2022 பாடசாலைகளுக்கிடையிலான தேசிய கராத்தே போட்டி இம்மாதம் 4,5,6 ஆகிய திகதிகளில் கண்டி மாநகர உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்ற போட்டியில் மகா தேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த கிளி/இந்துக் கல்லூரி மாணவர்கள் குழு குமித்தே போட்டியில் 16 வயதுப் பிரிவு கு.சாளினி, 18வயதுப் பிரிவு த.கொசிகா, 20 வயதுப் பிரிவு த.சாணுஜா வெண்கலப் பதக்கத்தினையும் அத்தோடு 20 வயது பிரிவில் உ.றமேஸ்ராஜா குமித்தே (-57 kg ) போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

## ஐ.பி.எல் தொடரிலிருந்து பொலார்ட் திடீர் ஓய்வு

இந்தியாவில் நடைபெறும் இருபது-20 லீக் ஐ.பி.எல் தொடரிலிருந்து, மேற்கிந்திய தீவுகள் அணியின் துடுப்பாட்ட சகலதுறை வீரரான கிரயன் பொலார்ட் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஐ.பி.எல் 2023 தக்க வைப்பு ஏலத்தில் இருந்து அவரை மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் வீரர்கள் பட்டியலில் இருந்து விடுவித்ததைத் தொடர்ந்து, அவர் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக செயற்படவுள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் 13 வருடங்களாக மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாடிய பொலார்ட், மும்பை அணிக்காக 189 போட்டிகளில் 16 அரை சதங்களுடன் 3412 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (6)

# உலகக்கிண்ண கால்பந்து தொடரில்
## பிரேசில், பிரான்ஸ் அணிகள் ஆதிக்கம் செலுத்தும்
### மெஸ்சி கணிப்பு



ஆடவருக்கான 22 ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடர் எதிர்வரும் 20 ஆம் திகதி கட்டாரில் ஆரம்பமாக வுள்ளது. இந்த கால்பந்து தொடரில் நடப்பு சம்பியன் பிரான்ஸ், முன்னாள் சம்பியன்களான பிரேசில், ஜேர்மனி, ஆர்ஜென்டீனா, இங்கிலாந்து, ஸ்பெயின் உட்பட 32 அணிகள் பங்கேற்கின்றன.

8 பிரிவாக இடம்பெறும் இந்த தொடரின் முதல்போட்டியில் கட்டார் மற்றும் ஈகுவடோர் அணிகள் மோதவுள்ளன.

இந்நிலையில் குறித்த தொடரை பிரேசில், பிரான்ஸ், இங்கிலாந்து அணிகள் வெல்வதற்கு வாய்ப்பு அதிகமிருப்பதாக ஆர்ஜென்டீனா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்சி கூறியுள்ளார்.

சி பிரிவில் அங்கம் வகிக்கும் ஆர்ஜென்டீனா அணி, 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தனது முதல் போட்டியில் சவுதிஅரேபியாவை சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)




டிஜா

குளிர் காலத்துல குளிக்கும் போது சில்லுனு முதல் மக்கு தண்ணிய எடுத்து மேல ஊத்திக்கும் போது கண்டுபிடிக்கப்பட்டது தான் "ப்ரேக் டான்ஸ்"



டிஷான்

ப்ரோ சென்னை வந்துட்டேன் சென்னையில நீங்க இருக்கிற ஏரியாவ சொல்லுங்க...



திரும்பி போயிருங்க ப்ரோ... சென்னையே ஒரே "ஏரியா" இருக்கு...

யுஸ்ரி

வலி என்றால் காதலின் வலிதான் வலிகளில் பெரிது...



பல்லு வலி வந்தா தெரியும்... காதல் வலி பெருசா இல்ல பல்லு வலி பெருசா எண்டு....

ஹரின்

இந்த உலகத்தில நல்லவங்கள எங்க தேடினாலும் கிடைக்க மாட்டாங்க ஏன்னா?



நான் வீட்டுல இருப்கேன்...

பையன்: ஏய் புள்ள ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கலாமா,
பெண்: செருப்பு பிஞ்சிடும்...
பையன்: பராவாயில்ல... கையில எடுத்துக்கிட்டு ஓடிடலாம்...!



அஷ்வின்

நாட்கள் எவ்ளோ வேகமா போகுது பாத்தீங்களா?




இப்பதான் சம்பளம் வாங்கின மாதிரி இருந்துச்சு அதுக்குள்ள கையில சல்லி பைசா கூட இல்ல...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கஞ்சா பயிரிட அனுமதிப்பது நாட்டை நாசமாக்கும் செயல்

## ஓமல்பே சோபித தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

கஞ்சா சாகுபடியை "திரிலோக பத்ரா" என்று பெயரிட்டு சட்ட பூர்வமாக்கும் எந்தவொரு முயற்சியும் இலங்கையின் வீழ்ச்சியின் தொடக்கமாகும் என்பதுடன், இது ஏற்கனவே முடங்கிப்போயிருக்கும் தேசத்தை முற்றிலும் தூள்தூளாக்கும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், கஞ்சா பயிரிடுவதன் மூலம் பொருளாதாரப் பலன்கள் கிடைக்கும் அதே வேளையில், மக்களின் மனதைத் திசைதிருப்பும் வகையில் திட்டமிடப்பட்ட திட்டம் இது எனவும் அவர் தெரிவித்தார்.

கஞ்சா பயிரிடுவதை சட்ட பூர்வமாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவது ஒட்டுமொத்த தேசத்துக்கும் துரோகம் செய்யும் பாவமாக கருதலாம்.

ஆயுர்வேத மருத்துவர்கள் கஞ்சாவை மருந்தாக பயன்படுத்த அனுமதித்தனர். நாங்கள் அதனை தடை செய்ய முடியாது. ஆனால் நாம் அவற்றை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்த வேண்டும்.

ஏற்றுமதிக்கான ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் 372 ஆயுர்வேத மருத்துவ மூலிகை பொருட்கள் பற்றாக்குறையால் உற்பத்தி இடைநிறுத்தப்பட்டது.

"ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போது டொலர் நெருக்கடியால் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது.

அரலு, புலு, நெல்லி, பபடகம், பின்கொஹொம்பா, கொத்தலா ஹிம்புடு, வெனிவல்கட்டா போன்ற பொருட்கள் உள்ளன. ஆயுர்வேத மருந்து தயாரிப்புகளுக்கு பற்றாக்குறை உள்ளது,"

மேற்கூறிய பொருட்களை நாம் பயிரிட்டால், அவற்றை இலங்கையின் ஆயுர்வேதப் பொருட்களாக ஏற்றுமதி செய்வதில் நாடு பெருமை கொள்ள முடியும் என தேரர் மேலும் தெரிவித்தார். (நி)

# ராஜீவ் காந்தி கொலை சம்பவம் விடுவிக்கப்பட்டவர்கள் இலங்கைக்கு

## இந்திய ஊடகங்கள் செய்தி வெளியீடு

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, சிறைத்தண்டனைக்கு பின்னர், உயர் நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட நான்கு இலங்கை பிரஜைகளும் அவர்களது சொந்த நாட்டிற்கு நாடு கடத்தப்படுவார்கள் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சக தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன், ரொபர்ட் பயஸ், எஸ்.ஜெயக்குமார் மற்றும் டி.சாந்தன் ஆகிய நால்வரையும் நாடு கடத்துமாறு தமிழக அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நால்வரும் தற்போது திருச்சியில் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள், இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் சில சட்ட நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அந்தத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

எனினும் அவர்கள் நாடு கடத்தப்படுவதற்கான காலக்கெடு அல்லது குறிப்பிட்ட திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

இந்த விடுதலை மற்றும் நாடு கடத்தல்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுவிக்கப்பட்ட சிலர் இலங்கையைத் தவிர வேறு நாடுகளுக்குச் செல்ல விரும்புவதாகக் கூறப்படும் நிலையில், அதில் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு எந்த ஆட்சேபனையும் இருக்காது.

எனினும் இது மற்ற நாடுகளின் விசாக்கள் கிடைப்பதை பொறுத்தது என்று தமிழக அரச அதிகாரி ஒருவரைக் கோடிட்டு இந்திய செய்தித்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (நி)

# நாடு திரும்பவுள்ள பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 20 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார் என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் பசில் ராஜபக்ஷ அமெரிக்கா சென்றிருந்தார்.

இதனையடுத்து மொட்டு கட்சியை வழிநடத்தும் பொறுப்பு நாமலிடம் கையளிக்கப்பட்டது.

அவர் பதில் தேசிய அமைப்பாளராக செயற்பட்டார்.

இந்நிலையில் வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னரே பசில் ராஜபக்ஷ இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)


## சமாதான நீதவான்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. நற்குணம் சாந்தகிரிநாதன்
பிரதி அதிபர் மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்
(சமாதான நீதவான்)

Best Wishes

திரு. நந்தகோபாலசிங்கம் இராமச்சந்திரன்
சிரேஷ்ட ஆசிரியர் மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்
(சமாதான நீதவான்)



மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பிரதி அதிபராக பணிபுரியும் திரு.நற்குணம் சாந்தகிரிநாதன் மற்றும் ஆசிரியராக பணிபுரியும் திரு.நந்தகோபாலசிங்கம் இராமச்சந்திரன் ஆகியோருக்கு 11.11.2022 அன்று அகில இலங்கை ரீதியான சமாதான நீதவான் பதவி கிடைத்தமையை இட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்கள் எமது மக்களுக்காக மென்மேலும் சிறப்பான பணிகள்ள ஆற்றி பணியில் உயர்ந்திட வாழ்த்தி பாராட்டுகின்றோம். (13472)

வாழ்த்தி நிற்போர்
பாடசாலை சமூகம், மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்.


# இராசிபலன்

17.11.2022
கார்த்திகை 01,வியாழக்கிழமை
நவமி முழுவதும்

மகம் முன்னிரவு 7.43 மணிவரை
சுபநேரம் 7.38-9.08 மணிவரை
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை

ஐயப்பன் விரதாரம்பம்
சந்திராஷ்டமம்
திருவோணம்,அவிட்டம்

வளவன்

**மேஷம்**
பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**
எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**
சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வங்கிச் சேமிப்புக்கள் உயர்வடையும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கன்னி**
சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் கிடைக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தேக நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி கால வரையறைக்குள் அடங்காது.

# 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை திடீர் கள விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரி ச.விஜிதரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரின் கள விஜயத்தின் போது கடந்த ஒக்டோபர் மாதத்தில் 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தோடு 14 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் பணம் வர்த்தகர்களிடம் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

பொருட்களுக்கான சந்தை விலையினை காட்சிப்படுத்தாமை, குறிக்கப்பட்ட விலை மற்றும் கட்டுப்பாட்டு விலையினை மீறி பொருட்களை விற்றமை, ஏமாற்றும் நோக்கோடு பண்டத்தின் மீது பொறிக்கப்பட்ட விலையினை மாற்றி விற்பனை செய்தமை, நிறைகுறைவாக பாண் விற்பனை, உற்பத்தி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் கள விஜயத்தின் போது பிடிபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ். மாவட்டத்திலுள்ள மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் மிகவும் அவதானமாக தமது வியாபார செயற்பாட்டை பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுத்துமாறு யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6-33-104)

# சடலங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாத நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி யாழ்.பேருந்து தரிப்பிடத்திலிருந்து யாழ்ப்பாண பொலிஸாரால் யாழ்.போதன மருத்துவமனைக்கு இறந்த நிலையில் கொண்டு வரப்பட்ட இனங்காணப்படாத பெண் ஒருவரின் சடலமும் கடந்த 4 ஆம் திகதி அன்று திருவடி நிலை கடற்கரையில் ஒதுங்கி வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவினரால் யாழ். போதனா மருத்துவமனைக்கு இறந்த நிலையில் கொண்டு வரப்பட்ட ஆண் ஒருவரின் சடலமும் யாழ்.போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த இரு சடலங்களும் இதுவரையில் யாராலும் உரிமை கோரப்படாமல் உள்ளன. எனவே உரியவர்கள் குறித்த சடலங்களை அடையாளப்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவ மனையின் பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

### வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யா/கொட்டடி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவன் பண்ணை வீதி, விசகடி வைத்தியர் அலுவலகத்தில் நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது என கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-6)



COP27 - UN கால நிலைமாற்ற மாநாடு பற்றிய விழிப்புணர்வூட்டும் செயல் அமர்வு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிபர் கே.திலீபன் தலைமையில் நடைபெற்றது. (படம்:சிவசாந்தன்)



வட்டு மத்திய கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கல்லூரியின் அதிபர் தலைமையில் கல்லூரியின் பொது மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:-கஜிந்தன்)

### மகரஜோதி மண்டல பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை யாழ்.உரும்பிராய் சாட்டுப்பத்தூர் சபரி பீடம் என அழைக்கும் சிவதர்ம சாஸ்த்தா திருக்கோவில் மகர ஜோதி மண்டல பூசையும் 16 ஆவது ஆண்டு உற்சவப் பெரு தின விழாவும் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 15.01.2023 வரை நடைபெறவுள்ளது. (6)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் மூத்த கலை இலக்கிய செயற்பாட்டாளரான க.தணிகாசலத்தைக் கௌரவிக்கும் முகமாக ஜீவநதி சஞ்சிகையினால் வெளியிடப்பட்ட க.தணிகாசலம் சிறப்பிதழின் அறிமுகமும் கலந்துரையாடலும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 இற்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (6)

### தொழில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு IT/BPM தொழில் கண்காட்சி 2022 யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழக ங்களில் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் 5 மணி வரை நடைபெறவுள்ளது. (6)

# யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம் செய்து கைதிகளை சந்தித்த வடமாகாண ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருட்களோடு கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை பார்வையிடவே நேற்று சிறைச்சாலைக்கு வந்தேன் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலைக்கு நேற்று விஜயம் மேற் கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

யாழ்.சிறைச்சாலையில் போதைப்பொருள் பாவனை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 38 கைதிகளை சந்தித்து கலந்துரையாடினேன்.

போதைப் பொருளோடு சம்பந்தப்பட்டு கைது செய்யப்படும் நபர் 3 தொடக்கம் ஆறு மாதங்களாவது சிறைச்சாலையில் இருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே அவ்வாறான காலப் பகுதியில் அவர்கள் தங்களது வாழ்வியலை முன்னோக்கி கொண்டு போகக்கூடிய சில வேலை திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நான் கலந்துரையாடினேன்

போதைப் பொருளுக்கு அடிமையாகி யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பற்றி ஆராய்வதற்காகவே நேற்று யாழ். சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். (நி-6-33-104)

# சோலைவரி செலுத்தாத ஆதனங்களை நடுக்கட்டு செய்ய தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட காணிகளுக்கு நீண்டகாலம் சோலை வரி செலுத்தாதிருப்பின் குறித்த ஆதனங்களை நடுக்கட்டு செய்ய நகரசபை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக நகர சபையினர் கருத்து தெரிவிக்கையில்,

2022 ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி நகரசபையின் வரவு-செலவுத் திட்டத்தில் சோலை வரி ஊடான உத்தேச வருமானம் 6.5 மில்லியன் ரூபாவாக கணிக்கப்பட்டு வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் இதுவரை சோலை வரி ஊடாக சபைக்கு 2.6 மில்லியன் ரூபாய் மாத்திரமே வருமானமாக கிடைத்துள்ளது.

சோலை வரி அறவிட நடமாடும் சேவைகளை வட்டார ரீதியாக முன்னெடுத்த போதிலும் கூட பலரும் சோலை வரி செலுத்த முன்வரவில்லை.

வருமான இழப்பு மற்றும் பராமரிப்பு அற்ற காணிகளால் ஏற்படுகின்ற சுகாதார சீர்கேடுகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு நீண்ட காலமாக சோலை வரி செலுத்தாத வீடுகள், காணிகள் உள்ளிட்ட ஆதனங்களை நடுக்கட்டு செய்ய சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (நி-6-30)

# பெண்களுக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

## வழக்கு பதிவின் பின் பிணையில் விடுதலை

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின் துண்டிப்பு வேளையில் பெண்களுக்கு இடையூறு செய்த இருவர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பியந்த அமரசிங்க தலைமையில் குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமையும் பொலிஸார் இவ்வாறான கைது நடவடிக்கைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியாவில் கடும் வரட்சி 3 லட்சம் பேர் உயிரிழக்கலாம் என ஐ.நா அச்சம்

(சோமாலியா)

2011 ஆம் ஆண்டு சோமாலியாவில் ஏற்பட்ட பஞ்சத்தில் 10 இலட்சம் பேர் வரை உயிரிழந்தனர். அதே போன்ற வரட்சி நிலையை சோமாலியா இந்த ஆண்டும் எதிர்கொண்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் சோமாலியாவின் நிலைமை மேலும் மோசமாகலாம் என ஐ.நா எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், இவ்வாண்டு டிசெம்பருக்குள் சோமாலியாவில் 3 இலட்சம் பேர் வரை உயிரிழக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

வரலாற்றில் பண்டைய எகிப்து உள்ளிட்ட நாடுகளுடன் ஏற்றுமதி செய்து செல்வ வளமிக்க நாடாகவே சோமாலியா இருந்திருக்கிறது.

ரோமானிய அரசுகளுக்கு முந்தைய வரலாற்றை சோமாலியா கொண்டிருந்தது. காலப் போக்கில் போர்கள், நோய்கள், வரட்சி காரணமாக சோமாலியா தனது வளத்தை இழந்து பொருளாதாரத்தில் பின்தங்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டது.

ஆனால், சோமாலியாவின் மோசமான நிலை என்பது அந்நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் தற்போதைய வரட்சியே பார்க்கப்படுகிறது.

சோமாலியாவில் சுமார் 70 இலட்சம் மக்கள் மனிதாபிமான உதவிகளுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலட்சக்கணக்கான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில்தான் சர்வதேச நாடுகளின் உதவியை சோமாலியா கோரியுள்ளது.


மேலும் ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக சோமாலியாவுக்கு சர்வதேச நாடுகளிலிருந்து கிடைக்கும் நிதி உதவிகள் கிடைப்பதில் தாமதம் நீடிக்கின்றது. சோமாலியா எதிர்கொண்டுள்ள இந்த சூழல் விரைவில் மாற வேண்டும் என்று ஐ. நாவின் சர்வதேச மனித உரிமை அமைப்பும் கோரிக்கை விடுத்துள்ளது. (நி)

# நேட்டோ நாடான போலந்து மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

## இருவர் உயிரிழப்பு

(வர்சா)

**ரஷ்ய ஏவுகணைகள் போலந்து நாட்டை தாக்கியதில் இருவர் கொல்லப்பட்டதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.**




ஐரோப்பிய நாடான போலந்து நேட்டோவின் உறுப்பினராக அங்கம் வகிக்கிறது. இந்த நிலையில், உக்ரைனின் எல்லைக்கு அருகில் உள்ள போலந்து கிராமமான ப்ரெஸ்வோடோவில் ரஷ்ய ஏவுகணைகள் வீழ்ந்ததாக அமெரிக்க உளவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே உக்ரைன் எல்லைக்கு அருகில் உள்ள போலந்து கிராமமான ப்ரெஸ்வோடோ மீது தமது ஏவுகணைகள் விழுந்ததாக போலந்து ஊடகங்கள் மற்றும் அதிகாரிகளின் தகவலை ரஷ்யா முற்றாக மறுத்துள்ளது.

இதனிடையே ரஷ்யாவின் தாக்குதலை அடுத்து போலந்து ஜனாதிபதி ஆண்டிரெஜ் துடா மற்றும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் இருவரும் அவசர பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர் என போலந்து ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# சமாதானப் பேச்சுக்கு அழைத்த உக்ரைன் பேச்சில் நாட்டமில்லை என மறுத்த ரஷ்யா




(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பாலித்தீவில் நேற்று முன்தினம் ஆரம்பித்த உலகின் முக்கிய பொருளாதார வலு கொண்ட நாடுகளின் ஜி-20 மாநாட்டில் பங்கெடுத்த மேற்குலகத் தலைவர்களால் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்குரிய கண்டனங்கள் வெளிப்பட்டுள்ள அதே நேரம், உலகின் உணவு நெருக்கடிக்கு பாதுகாப்பை வழங்கும் தீர்வுகள் அலசப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜி-20 மாநாட்டில் மெய்நிகர் வழியில் உரையாற்றிய உக்ரைனின் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி ரஷ்யாவுடனான சமாதானப் பேச்சுக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ரஷ்யாவின் அணுசக்தி அச்சுறுத்தல்களை கைவிடச் செய்ய வேண்டுமானால் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிசக்தியின் மீதான விலை வரம்பை நடைமுறைப்படுத்த ஜி-20 நாடுகள் தங்கள் முழு சக்தியையும் பயன்படுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் வொலோடிமிர் ஜெலென்ஸ்கியின் முன்மொழிவுகள் குறித்து உடனடியாக பதிலளித்த ரஷ்யா, உண்மையில் உக்ரைனுக்குத் தான் பேச்சுவார்த்தைகளை நடத்த நாட்டமில்லை எனத் தெரிவித்துள்ளது.

உக்ரைன் தரப்பின் நடைமுறைகள் அது உண்மையில் பேச்சுவார்த்தை நடத்த விரும்பவில்லை என்பதைக் காட்டுவதாக குறிப்பிட்டுள்ள ரஷ்ய ஜனாதிபதியின் பேச்சாளர், ரஷ்யா தனது சிறப்பு இராணுவ நடவடிக்கையின் இலக்குகளை தொடர்ந்து அடையும் என்பதை மீண்டும் வலியுறுத்தினார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1
கி.பூ: சூரி 1 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L (கனடா)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/13107

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 6 சூரி.செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc ,MSc ,Cima Engineer (அமெரிக்கா)
எதிர்பார்ப்பு: உயர்கல்வி கற்றவர்
தொ.இ: B/13109

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 47 சூரி 11 செவ் 7 இல்
உயரம்: 173 cm
தகைமை/தொழில்:BSc (Hons) (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்
தொ.இ: B/13110

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: சூரி 10 செவ் 11 இல்
தகைமை/தொழில்: O/L கூலி
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13111

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: சூரி 1 செவ் 4 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தானவர்
தொ.இ:G/13122

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3
கி.பா: சூரி 12 செவ் 9 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் திருமணமாகி கணவன் இறந்துவிட்டார்
தொ.இ: G/13123

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 15½ சூரி 10 செவ் 7 இல்
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: BSc (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: படித்தவர் லண்டன் மட்டும்
தொ.இ: G/13126

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 17 சூரி 11 செவ் 4 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: Bcom 2nd year (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13128

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் [illegible] ரூபாவுடன் தொலைபேசியில் பதிவு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட தீர்மானம்



(வோஷிங்டன்)

2024 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

### காவியத் தொடர் 30





திருப்புறம்பியம் போரில் பல்லவ சைன்யத்துக்குத் துணையாக நின்று மதுரைப் பாண்டியரின் படையை நிர்மூலமாக்கினார். அது முதலாவது சோழ ராஜ்யம் நாளுக்கு நாள் பெருகி விஸ்தரித்து வந்திருக்கிறது. காவேரி நதிக்குக் கரையெடுத்த கரிகால் வளவர் காலத்திலே கூடச் சோழ ராஜ்யம் இவ்வளவு மகோன்னதத்தை அடைந்தது கிடையாது.

இன்றைக்குத் தெற்கே குமரி முனையிலிருந்து வடக்கே துங்கபத்திரை கிருஷ்ணை வரையில் சோழ சாம்ராஜ்யம் பரந்து விரிந்து கிடக்கிறது. பாண்டிய நாடு, நாஞ்சில் நாடு, யாருக்கும் இதுவரையில் வணங்காத சேர நாடு, தொண்டை மண்டலம், பாகி நாடு, கங்கபாடி, நுளம்ப பாடி, வைதும்பர் நாடு, சீட்புலி நாடு, பெரும்பாணப்பாடி, பொன்னி நதி உற்பத்தியாகும் குடகு நாடு ஆகிய இத்தனை நாடுகளும் சோழ சாம்ராஜ்யத்துக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வருகின்றன.

இவ்வளவு நாடுகளிலும் நம் சோழ நாட்டுப் புலிக்கொடி பறக்கிறது. தெற்கே ஈழமும் வடக்கே இரட்டை மண்டலமும் வேங்கியும் கூட இதற்குள் நமக்குப் பணிந்திருக்க வேண்டும். அப்படிப் பணியாததற்குக் காரணங்களை நான் சொல்ல வேண்டியதில்லை அவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்தது தான்!".

"ஆம் எல்லோருக்கும் தெரியும் ஈழமும் இரட்டைப்பாடியும் வேங்கியும் கலிங்கமும் பணியாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒரு காரணம் வடதிசை மாதண்ட நாயகராகிய இளவரசர் ஆதித்த கரிகாலர். இன்னொரு காரணம் தென் திசைப் படைத் தலைவரான அவருடைய தம்பி அருள்மொழி வர்மர்..."

"மழவரையர் கூறும் காரணத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். சென்ற நூறாண்டு காலமாக இந்தச் சோழ நாட்டில் சேனாதிபதி நியமிக்கும் மரபு வேறாயிருந்தது. பல யுத்தங்களில் ஈடுபட்டு அனுபவம் பெற்ற வீராதி வீரர்களையே படைத் தலைவர்களையும் மாதண்ட நாயகர்களாகவும் நியமிப்பார்கள்.

ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன? மூத்த இளவரசர் வடதிசைச் சேனையின் சேனாபதி அவர் என்ன செய்கிறார்? இரட்டை மண்டலத்தின் மீதும் வேங்கி நாடு மீதும் படையெடுத்துப் போகவில்லை. காஞ்சிபுரத்தில் உட்கார்ந்து கொண்டு பொன் மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறார். வீரப் பெருங்குடியில் பிறந்த வீராதி வீரர்களாகிய உங்களைக் கேட்கிறேன். இதற்கு முன்னர் தமிழகத்தில் எந்த மன்னராவது தாம் வசிப்பதற்குப் பொன்னால் மாளிகை கட்டியதுண்டா? உலகமெங்கும் புகழ் பரப்பி இப்போது கைலாச வாசியாயிருக்கும் மதுரையும் ஈழமும் கொண்ட பராந்தக சக்கரவர்த்தி கூடத் தாம் வசிப்பதற்குப் பொன் மாளிகை கட்டிக் கொள்ளவில்லை.

தில்லைச் சிற்றம்பலத்துக்குத் தான் பொன்கூரை வேய்ந்தார். ஆனால் இளவரசர் ஆதித்த கரிகாலர் தாம் வசிப்பதற்குக் காஞ்சிபுரத்தில் பொன்மாளிகை கட்டுகிறார்! பல்லவ சக்கரவர்த்திகள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து ராஜ்ய பாரம் புரிந்த அரண்மனைகள் இவருடைய அந்தஸ்துக்குப் போதவில்லையாம். பொன்னிழைத்த அரண்மனை கட்டுகிறார்.

இரத்தினங்களையும் வைடூரியங்களையும் அப்பொன் மாளிகைச் சுவர்களில் பதிக்கிறார். கங்கபாடி, நுளம்பபாடி, குடகு முதலிய நாடுகளில் வெற்றியடைந்து, கைப்பற்றிக் கொண்டு வந்த பொருளில் ஒரு செப்புக் காசாவது தலைநகரிலுள்ள பொக்கிஷசாலைக்கு அவர் இதுவரை அனுப்பவில்லை.." (தொடரும்...)

தாங்கள்ளங்களுடைய இணையில்லாத் தலைவர். தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்ற இங்குள்ளவர் அனைவரும் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் காட்டிய வழியில் நடக்கிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ள வேண்டும்! என்று சம்புவரையர் உணர்ச்சியுடனே கூறினார்.

"நானும் கொஞ்சம் பொறுமை இழந்து விட்டேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஒரு விடயத்தை எண்ணிப் பாருங்கள். சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விஜயாலய சோழர் முத்தரையர்களை முறியடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார்.



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## புவன சுந்தரி

மோகன் கவர்ந்து சென்ற புவனசுந்தரியை சமாதான வழியில் கிரேக்கர்கள் மீட்க முய்ற்சி செய்தது பலிக்கவில்லை. புவனசுந்தரியின் கணவன் பிரதாபன் ட்ராய் மீது படைஎடுத்துச் செல்லத் தனக்கு உதவுமாறு மற்ற கிரேக்க மன்னர்களிடம் கேட்டான். அவர்களும் உதவிக்கு வரவே கிரேக்கப் படை கப்பலில் பயணமாகிறது.

ரூபதரனும் வச்சிரகாயனும் அப்படையெடுப்பில் கலந்து கொள்ளாமலிருக்க முயன்றும் முடியவில்லை. அவர்களையும் அழைத்துக் கொண்டு கிரேக்கப் படை முடிவில் ட்ராய் கடற்கரையை அண்டந்தது.

ட்ராய் கடற்கரையில் கப்பலிலிருந்து முதலில் குதித்தவன் சந்திரப்பிரபன். அடுத்து வச்சிரகாயன் குதித்து இறங்கினான். இவர்களின் பின் கிரேக்கப் படை இறங்கிச் சென்றது. ட்ரோஜன் வீரர்களில் மராளன் என்பவன் ஒருவன்.

அவனை ஈட்டியாலோ அல்லது வாளாலோ கொல்ல முடியாது. அவன் முதல் நாளில் கிரேக்கப் படையை எதிர்த்துப் போராடியதோடு நில்லாமல் பல கிரேக்க வீரர்களைக் கொன்றான்.

வச்சிரகாயன் இந்த மராளனை எதிர்த்துச் சண்டையிட்டான். அவனால் எளிதில் மராளனைக் கொல்ல முடியவில்லை. அவனைத் தள்ளிக் கீழே விழச் செய்து வச்சிரகாயன் அவன் மார்பின் மீது அமர்ந்து அவன் கழுத்தைப் பிடித்து அமுக்கிக் கொன்றான்.

மராளன் இறந்ததும் ட்ராய் படைகள் பயந்து சிதறிப் பின் வாங்கி ட்ராய் நகருக்குள் ஓடி விட்டன. கிரேக்கர்கள் தம் கப்பல்களைப் பத்திரமான இடங்களில் நிறுத்தி வைத்தார்கள்.

ட்ராய் நகரக் கோட்டை மதிலுக்கு வெளியே நின்று கிரேக்கப் படைகள் முற்றுகையிட்டன. ஒன்பது ஆண்டுகள் கழிந்தும் குறிப்பிடத்தக்க விதத்தில் எந்தப் போரும் நிகழவில்லை. ஆனால் பல சம்பவங்கள் மட்டும் நிகழ்ந்தன.

ட்ராய் மன்னனான வர்த்தனனின் மனைவிகள் இருவர். மோகனின் தாய் அவர்களில் இளையவள். மன்னனுக்குப் பிறந்த ஐப்பது குழந்தைகளில் பத்தொன்பதை அவள் பெற்றாள். அவர்களில் மூத்தவன் வீரசிம்மன்.

இலியடன் என்பவனும் இன்னொரு மகனாவான். இலியடனுக்கு இருபது வயதாகி விட்டால் ட்ராய் நகரை யாராலும் வெல்ல முடியாது என ஆரூடம் கூறப்பட்டிருந்தது.

இதை அறிந்த வச்சிரகாயன் இலியடனை எப்படியாவது ஒழித்து விடுவது என்று தீர்மானித்தான். ஒரு நாள் இலியடன் ஒரு ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் குதிரைகளைப் பழக்கிக் கொண்டிருந்தான். அப்போது வச்சிரகாயன் அங்கு சென்று இலியடனை ஈட்டியால் குத்திக் கொன்றான். இலியடனின் மரணத்தால் ட்ராய் நகரமே துயரக் கடலில் மூழ்கியது.

வர்த்தனின் புதல்வர்களில் விருகாட்சன் என்பவனும் ஒருவன் அவன் மரங்களை அறுத்து தேர்களுக்கு வேண்டிய சட்டங்களைச் செய்து கொண்டிருந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கள் மகத்தான பணியைச் செய்யப்
பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
- விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளத் தெரியாத நாடு

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந் தார்.

வரி விதிப்புகளை கணிசமாகக் கொண்டுள்ள மேற்போந்த வரவு செலவுத் திட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனங்களைத் தெரிவித்து வருகின்றன.

உச்சமான வரிகளைப் பொதுமக்களிடம் விதிப்பது ஆட்சிக்கு அழக்ல்ல என்பது தெரிந்த விடயம்.

இருந்தும் இதைவிட்டால் வேறு என்ன தான் வழி நம் நாட்டில் இருக்கிறது என்ற கேள்வி எழும்.

அவ்வாறானதொரு கேள்வி எழுமாயின் அதில் நியாயம் உண்டென்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆக, உயர்ந்த வரி விதிப்பின் காரணம் என்ன? என்பதை ஆராய்ந்தால் இந்த நாடு மிகப்பெரும் தொகையை போருக்காகக் கொட்டித் தீர்த்தது என்பதை அறிய முடியும்.

உண்மை. தன் நாட்டு மக்களை இனத்தின் பேரால் அழிப்பு செய்வதற்காக உலக நாடுகளிடம் இருந்து ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் கொள்வனவு செய்து இந்த நாட்டின் செல்வத்தைத் தேய்த்தழித்த தேசம் இது.

இவ்வாறான கொடும் யுத்தமும் அதற்கான செலவும் இந்த நாட்டைச் சீரழிக்கும் என்று பாராளுமன்றத்தில் எழுந்த நின்று பேசுவதற்கு எந்தச் சிங்களப் பிரதிநிதியும் தயாராகவில்லை.

மாறாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் அவசரகாலச் சீட்டத்தையும் நிவைேற்றி தமிழ் மக்களை வதைக்கின்ற கொடுமையை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் செய்து முடித் தனர்.

அதன்விளைவுதான் மக்கள் தலையில் விழுந்துள்ள வரிச்சுமை என்பதை இதய சுத்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த உண்மை உணரப்பட்டால், அதன் அடுத்த கட்ட நடவடிக்கை, இனப் பிரச்சினையைத் தீர்த்தால் மட்டுமே நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க முடியும் என்ற மெய்மை தெரியவரும்

ஆனால் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்படுவதை - அதிகாரம் கொடுக்கப்படுவதை எதிர்ப்பதுதான் தங்களின் தொழில் என்றிருக்கக்கூடிய சிங்கள அரசியல்வாதிகள் இன்னமும் திருந்தியபாடில்லை. அதேநேரம் அவர்களை சிங்கள மக்களும் இன்னமும் இனம் காணாமல் இருக்கின்றனர்.

இங்குதான் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு வரி விதிப்பைத் தவிர வேறு எதுவும் தெரியாத கட்டத்தில் அரசாங்கம் இருப்பதை உணர முடியும்.

ஆம், பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ள இலங்கையை மீட்டெடுக்கக்கூடிய மூலதனப் பலம் புலம்பெயர் தமிழ் மக்களிடம் உண்டு.

இருந்தும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் நயவஞ்சகத்தனத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களின் பொருளாதாரப் பலத்தை இலங்கையில் முதலிடுவதற்குத் தயங்குகின்றனர்.

எனவே அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை இலங்கையில் முதலிட வைப்பதாக இருந்தால், அதற்கான ஒரே வழி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும்.

இதைச் செய்யாதவரை வரிவிதிப்பு வானுயரும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# சிறுமி மீது பாலியல் துஸ்பிரயோகம் கைதானவருக்கு 10 வருட சிறை!

## வவு. மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

16 வயதுக்கு குறைந்த சிறுமி மீது பாலியல் வல்லுறவு புரிந்து சிறுமிக்கு குழந்தை பிறப்பதற்கு காரணமாக இருந்த சித்தப்பா முறையான குடும்பஸ்தர் ஒருவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் 4 இலட்சம் ரூபா நட்ட ஈடு செலுத்த வேண்டும் என நீதிபதி இளஞ்செழியன் நேற்று முன்தினம் அதிரடி உத்தரவு பிறப்பித் துள்ளார்.

அதனை கட்டத் தவறும் பட்சத்தில் இரு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும், 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் கட்டத் தவறும் பட்சத்தில் இரு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு மே மாதம் வவுனியா, கிழவன்குளம் என்னும் இடத்தில், தாயார் வெளிநாடு சென்றதன் காரணமாக தாயாரின் தங்கையின் வீட்டில் இந்த 15 வயதுடைய சிறுமி வாழ்ந்து வந்தவேளை தங்கையின் கணவரான சித்தப்பாவினால் குறித்த சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்பின்னர், சிறுமிக்கு ஆண் குழந்தை பிறந்து, டிஎன்ஏ பரிசோதனை செய்ததன் மூலம் அந்த குழந்தைக்கு, சிறுமியின் சித்தப்பா முறையான உறவினரே தந்தை என உறுதிப்படுத்தப் பட்டது.

இதனையடுத்து நீதிமன்றத்தால் இந்த தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தண்டனையை குறைக்குமாறு கோரிய விண்ணப்பம் மன்றினால்நிராகரிக்கப் பட்டது. (4,7,250)

## கேட்டல் குறைபாடு உள்ளவர்களும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறலாம்

நாடளாவிய ரீதியில் முதன்முறையாக, கேட்டல் குறைபாடு உடையவர்களுக்கான இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முன்னோடித் திட்டம் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் நேற்று கம்பஹா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

1998 ஆம் ஆண்டு முதல் இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனம் விடுத்த கோரிக்கையை கருத்திற் கொண்டு, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண வழிகாட்டலின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்த, நிகழ்வில்; கடந்த 6 ஆம்திகதி சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் நடத்தப்பட்ட எழுத்துமூல பரீட்சைக்கு கம்பஹா மாவட்டத்தில் தோற்றிய கேட்டல் குறைபாடுள்ள 76 பேரில், சித்தியடைந்த 44 பேருக்கு தற்காலிக சாரதி பயிலுனர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

அத்துடன், மூன்று மாத பயிற்சிக்குப் பிறகு நடைமுறைத் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. (4-7)

## அரச ஊழியர்களின் விடுமுறை விண்ணப்பம் ஒன்லைன் முறையில்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் அச்சிடும் செலவை குறைக்க விடுமுறை விண்ணப்பங்களை ஒன்லைன்முறையின் ஊடாக நிரப்புவதற்கு தயார் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஏற்கனவே இது தொடர்பாக முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ள நிலையில், எதிர்காலத்தில் அரச அலுவலகங்களிலும் இந்த முறை திட்டமிடப்பட்டு அறிமுகப்படுத்தப்படும். என்றும் அமைச்சகம் அறிவித்துள்ளது. (4-7)

## 14 இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 14 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை பருத்தித்துறை அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 14 மீனவர்களையும்கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டிக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4,7, 104)

## ஆசிரிய மாணவன் திடீர் மரணம்

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் திடீரென நேற்று மரணமடைந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக குறித்த ஆசிரிய மாணவன் அவதிப்பட்டுள்ளார். இதனையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாய பாடப் பிரிவின் முதலாம் வருட ஆசிரிய மாணவனான மட்டக்களப்பு, காரைத்தீவினைச் சேர்ந்த ஜிந்துஜன் என்பவரே மரணமடைந்தவராவார். (4-7,250)

## சங்கானைப் பகுதியிலிருந்து 150 லீற்றர் கோடா மீட்பு

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை விழிசிட்டி பகுதியில் இருந்து 150 லீற்றர் கோடா நேற்று மீட்கப் பட்டுள்ளது.

வீட்டிற்கு பின்னால் கிடங்கினுள் குறித்த கோடா புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸாரால் 35 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கம்பி புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம் ஆகிய இடத்தில் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது."

*- மார்ட்டின் லூதர்(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை மருத்துவ அதிகாரியை இடமாற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிமனையின் ஆளுகைக்கு உட்பட்ட கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரியை இடமாற்றக் கோரி கர்ப்பிணித் தாய்மார்கள், பொதுமக்கள் என பலர் ஒன்றுகூடி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரிபணிமனை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.



குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது சமூகத்தை சீரழிக்க இடமளிக்க வேண்டாம், மருத்துவ அதிகாரியை இடமாற்று போன்ற வசனங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-312-316)

# முகநூலில் அவதூறு ஏற்படுத்தியதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு

(குருமன்காடு)

முகநூலில் அவதூறு ஏற்படுத்தியதாக இருவருக்கு எதிராக வவுனியா பொலிஸில் முறைபாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா சட்டத்தரணிகள் சங்க செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் நேற்று தெரிவித்தார். காணி உறுதி மோசடி தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி உட்பட 6 பேர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த செய்தியை முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்த நபர்கள் இருவர் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

வவுனியா சட்டத்தரணிகள் சங்க செயலாளரது பெயரையும் தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்து அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம், வவுனியா சட்டத்தர ணிகள் சங்கத்திற்கும், சட்டத்தரணிகளுக்கும் அவதூறு ஏற்பட்டுள்ளதாகவும் முறைபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-250)

# வாகனங்களை வாடகைக்கு எடுத்து அடகு வைக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

## மக்களை விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனங்களிடமிருந்து இரண்டு மூன்று நாட்களுக்கென வாகனங்களை வாடகைக்கு எடுத்து அந்த வாகனங்களை அடகு வைக்கும் சம்பவங்கள் அண்மைய நாட்களில் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு பதினைந்துக்கும் மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் எனினும் இன்றுவரை நான்குக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

நேற்று முன்தினம் நான்கு நாட்களுக்கென வாடகைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வாகனம் ஒன்று 20 இலட்சம் ரூபாவிற்கு அடகு வைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நெல்லியடி பகுதியில் பதிவாகியுள்ளமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

இந்த வாகனங்களை வாடகைக்கு வழங்கும் உரிமையாளர்கள் . மற்றும் பொதுமக்கள் இந்த விடயத்தில் மிகவும் விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-33)

# ‘புதுவசந்தம்’ மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் பிரதேச வரலாறு, தொல்லியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலை, இலக்கியம், வாழ்க்கை முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பிரதேசப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வெளியிடவுள்ள புது வசந்தம் - 2022 பிரதேச மலருக்கான ஆக்கங்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தட்டச்சு செய்தோ, கையெழுத்துப்பிரதியாகவோ அனுப்பி வைக்கவும். (நி-6)

# வவுனியா தினச் சந்தைப் பகுதியில் வாகன தரிப்பிடங்களை அமைக்குமாறு கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா இலுப்பையடியில் அமைந்துள்ள தினச் சந்தை பொருளாதார மத்திய நிலையத்தில் வாகன பாதுகாப்பு நிலையம் அமைப்பதால் பஜார் வீதி இலுப்பையடியில் ஏற்படும் வாகன நெரிசல் , போக்குவரத்து நெருக்கடி நிலைமைகளை கட்டுப்படுத்த முடியும் என அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மதகு வைத்த குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு திறக்கப்படும் போது தற்போது அமைந்துள்ள தினச் சந்தை பகுதியை அகற்றி அங்கு வாகனங்கள் தரிப்பிடப் பாதுகாப்பு நிலையம் அமைப்பதால் பஜார் வீதி இலுப்பையடியில் ஏற்படும் வாகன நெரிசல்களை கட்டுப்படுத்தி மக்கள் பாதுகாப்பாக பயணிக்க முடியும்.

அத்துடன் அப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக காணப்படும் வாகன நெரிசல்களை குறைக்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா. |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 160 | 200 |
| தக்காளி | 430 | 450 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 180 | 160 |
| கோவா | 350 | 300 | 300 | 300 |
| கரட | 300 | 480 | 550 | 550 |
| பூசணி | 180 | 170 | 140 | 160 |
| புடோல் | 260 | 300 | 160 | 250 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 600 | 800 |
| பெரிய வெங்காயம் | 350 | 320 | 350 | 350 |
| பாகற்காய் | 500 | 600 | 400 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 450 |
| லீக்ஸ் | 300 | 320 | 300 | 360 |
| பீற்றூட் | 250 | 300 | 280 | 350 |
| கறிமிளகாய் | 700 | 750 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 500 | 600 |
| போஞ்சி | 450 | 400 | 380 | 450 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 150 | 140 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 600 | — | 400 | 500 |
| முள்ளங்கி | 140 | 150 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 30 | 80 | 30 | 40 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 150 |

# போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு கிளியில் ஈருருளிப் பயணம் முன்னெடுப்பு



(முறிகண்டி)

இளையோரின் எதிர்காலம் இன்றே அமைப்பின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு துவிச்சக்கரவண்டி பயணம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று கிளிநொச்சி மருத்துவமனை முன்பாக ஆரம்பமான குறித்த பயணம் ஏ-9 வீதி ஊடாக பயணித்து, இரத்தினபுரம், கணேசபுரம் பகுதி ஊடாக மாவட்ட செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

கிளிநொச்சி நகர வட்டாரத்தை முன்னுரிமைப்படுத்தி ஆரம்பமான குறித்த பயணம் மாவட்டத்தில் காணப்படும் போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து இளம் சமூகம் விடுதலை பெறும் வகையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்கு குறித்த விழிப்புணர்வு தொடர்பில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இதில், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிறைவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.சிறிமோகனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (நி-6-100-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டுப்பகுதியில்...

வவுனியா கந்தன்குளத்திலுள்ள உறவினர் வீட்டிற்கு கடந்த ஒரு வருடத்திற்கு முன்னரே வந்து தங்கியிருந்து அங்குள்ள காணியினை தனிமையில் இருந்து பராமரித்து வந்துள்ளார்.

குடும்பத்தினர் குறித்த நபரை கடந்த 14 ஆம் திகதியிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியாததால் அவரது மனைவி நேரில் வந்து எங்கு தேடியும் கணவன் இல்லாமையினால் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் கணவனை காணவில்லையென முறைப்பாட்டினை பதிவு செய்திருந்தார்.

முறைப்பாட்டிற்கமைய கந்தன்குளம் பகுதியில் பொலிஸார் நேற்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது காட்டுப்பகுதியில் நாட்டுத் துப்பாக்கியுடன் சடலமாக காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மல்லாகத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய அச்சுதநாயகர் ஜெயந்தகுமார் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். கொலையா? அல்லது வேட்டைக்கு சென்ற போது ஏதாவது நடந்திருக்குமா? பல்வேறு கோணத்தில் பூர்வாங்க விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,299)

## குருநகர்...

சென்று மீன்களை பிடித்துக் கொண்டிருந்த அவரை காணாத மருமகன் களங்கண்டியில் பார்த்தபோது நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்டார்.

அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்று புதன்கிழமை விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்று பரிசோதனையில் நீரில் மூழ்கி மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (4-7,60)

## காணிப் பிரச்...

ஜனாதிபதியிடம் விளக்கமளிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

மடு யாத்திரைக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அருட்தந்தை ஜொய்ஸ் பெப்பி சொசாய், அருட்தந்தை அண்டனி சொசாய் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் மற்றும் பாரா்ளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (4-7)

## வடக்கில்...

சுற்றாடல் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடுகை விழா இன்று காலை 10 மணியளவில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்ட்ங்களிலும் 'நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கல்லுண்டாய் பகுதியிலும் கிளிநெச்சி மாவட்டத்தில் இரணைமடு இடது கரை பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ9 மாங்குளம் வீதியின் இருமருங்கிலும் வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் அரசு விதை உற்பத்தி பண்ணைப்பகுதியிலும் மன்னார் மாவட்டத்தில் பாலாவி திருக்கேதீச்சரம் பகுதியிலும் ஏறக்குறைய 1500 மரங்கள் நாட்டப்பட உள்ளன.

இவற்றிற்கு மேலதிகமாக வடமாகாண மர நடுகை மாத பகுதியில் வட மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள வளாகங்களில் ஏறக்குறைய 600 பழ மரக்கன்றுகளை நாட்டுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வடக்கு மா்காண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். (4-7)

## 306 இலங்கை...

பேர் அரச உத்தியோகத்தர்கள் என தற்போது புதிய தகவலொன்று வெளியாகியுள்ளது.

மீட்கப்பட்ட இலங்கையர்கள் அனைவரையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை கொழும்பில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (4-7)

## சிவப்பு அரிசி...

விலை 5 ரூபாயினால் குறைக்கப்பட்டு 205 ரூபாய்க்கு விற்கப்படும்.

ஒரு கிலோ பருப்பு (சிவப்பு) 9 ரூபாய் குறைக்கப்பட்டு 389 ரூபாய்க்கு விற்கப்படும். 425 கிராம் ரின் மீன் 45 ரூபாய் குறைக்கப்பட்டு 540 ரூபாய்க்கு விற்கப்படும். (4-7)

## அரச ஊழியர்கள்...

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான செயற்பாட்டை அரசாங்கத்தினால் மாத்திரம் தனித்து முன்னெடுக்க முடியாது. எதிர்க்கட்சியும் ஆளும் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரம் நெருக்கடியான சூழலை வெற்றி கொண்டு நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும்.

நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய இக்கட்டான நிலையில் இருந்து எவரும் விடுபட முடியாது.

ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஒரு சில அரச நிறுவனங்களை ஒன்றிணைக்க வேண்டும் அல்லது நட்டஈடு வழங்கி அரச சேவையாளர்களை குறைக்க நேரிடும். மறுபுறம் அத்தியாவசிய அரச பதவிகளில் வெற்றிடம் காணப்படுகிறது.

வெற்றிடமாக உள்ள அரச பதவிகளுக்கான நியமனங்களை கூட வழங்க முடியாத நிதி நெருக்கடி காணப்படுகிறது. அரச சேவை தொடர்பில் பேச்சுவார்த்தை ஊடாகஉறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

## அத்தியாவசிய...

கான உத்தரவை ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

எனினும் இந்த செஸ் வரி அதிகரிக்கப்பட்டாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய கூறியுள்ளார்.

குறிப்பாக நாட்டில் ஏற்கெனவே அத்தியாவசிய பொருட்களாக பட்டியலிடப்பட்ட 120 பொருட்களுக்கு இந்த செஸ் வரி அதிகரிப்பு பொருந்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1396
வெற்றி இலக்கங்கள்
கடகம் 6 3 4 9 0 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.16
சீட்டிழுப்பு இலக்கம் - 971
L 19 33 53 79
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 3183
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
O 03 28 32 51
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1289
Z 15 | 48 56 64 78

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 250
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 10 19 36 50 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/11/16
சீட்டிழுப்பு இலக்கம் 4941
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
0 6 6 0 7 3 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1916
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.16
தினம் புதன்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,825,400/-
C 11 41 49 67
ரூ.500/- பரிசுகளுக்காக 6349
ரூ.100/- பரிசுகளுக்காக 453

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.16
சீட்டிழுப்பு இல : 4077
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,877,500/-
வெற்றி இலக்கங்கள்
01 17 34 53 A
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-11-16
வெற்றி வாரம் 3628
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 20 27 46 47
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,521,040/-

27 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 21 26 59 61 65
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1092
வர்ணம் பச்சை
திகதி 2022.11.16 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 277,829,471.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1871
சீட்டிழுப்பு திகதி 2022-11-16
வெற்றி இலக்கங்கள்
08 13 17 70 Y
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 37,145,960/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழு இல : 1742
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.11.16
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,944,320/-
வெற்றி இலக்கங்கள்
16 33 44 45 R
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெல்லப்பட்ட அதிர்ஷ்டம்
15.11.2022 செவ்வாய்க்கிழமை சீட்டிழுக்கப்பட்ட **மஹஜன சம்பத** (4940) சீட்டிழுப்பில் மானிப்பாய் விற்பனை முகவர் **திருமதி மதிவதனி ரவிசந்தர்** ஊடாக **ரூ.20 00 000 (இருபது இலட்சம்)** வெல்லப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**திருமதி மதிவதனி**
**மானிப்பாய் விற்பனை முகவர்**
**(N-220045)**
(C-5276)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேசிய இனப்பிர...

சினைகளுக்கு தீர்வு காண தமிழ் அரசியல் தரப்பினரும் ஒருசில விடயங்களில் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும்.புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள கூட்டமைப்பினர் ஆதரவு வழங்க வேண்டும்.

சிறைச்சாலையில் பல ஆண்டு காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் சிறைகைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆகவே கூட்டமைப்பினர் நம்பிக்கையுடன் இலங்கையர் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.

(4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13465)

076 825 7716 (ஆகாஸ்)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 076 097 3127



மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

- CD 125 Benly (122) - Red
- Honda MD -90 (Un Registered)
- Honda Super Hub Lancer 50 (Japan)

(13469)

077 887 5037


# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 18.10.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் அருள்மலர் கனகரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 17.11.2022 இன்று வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் 18.11.2022 நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ராமகிரி, கே.கே.எஸ் வீதி
துர்க்காபுரம், தெல்லிப்பளை

(13474)

தகவல்
குடும்பத்தினர்

# 31ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சற்குணராஜா இராஜசுலோசனா

மீளாத் துயில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர்ப் பூக்களாய் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
ஜெயகாந்தன், யசிதரன்
40/7, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(13470)

# மரண அறிவித்தல்

மண்ணில்
15 – 10 – 1968



விண்ணில்
15 – 11 – 2022

## பத்மலிங்கம் றஞ்சிதமலர்

(ஆசிரியர் - றோ.க.மகளிர் கல்லூரி நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு 15 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மலிங்கம் றஞ்சிதமலர் அவர்கள் (15.11.2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் சதாசிவம் - பவளரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் பத்மலிங்கம்(முன்னாள் பொது முகாமையாளர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - நெடுந்தீவு) அவர்களின் பாசமிகு மனைவியும் தனுஜன், மேனுஜன்(மாணவன்- சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) லக்ஷிகா (மாணவி-றோ.க.மகளிர் கல்லூரி,நெடுந்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தவமணி, குணமணி, கோணேஸ்வரி, பரராசசிங்கம், கமலேஸ்வரி, மங்களேஸ்வரி, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பற்றிக் ரவீந்திரன், பாலச்சந்திரன், தனலட்சுமி காலஞ்சென்ற கணேசமூர்த்தி, காலஞ்சென்ற சத்தியதாசன், இசைப்பிரியா மற்றும் கௌசலாதேவி காலஞ்சென்ற கனகலிங்கம், சகுந்தலாதேவி, வாமதேவன் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நெடுந்தீவு கிழக்கு 15 ஆம் வட்டாரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 17.11.2022 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கிழக்கு கட்டுரமன் சல்லி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5274)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சின்னத்துரை தியாகலிங்கம்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினராக இருந்த **சின்னத்துரை தியாகலிங்கம்** அவர்களின் மரணமானது அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் அளிக்கிறது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
யாழ்.மாவட்ட கிளை, பருத்தித்துறை தொகுதிக்கிளை,
குடத்தனை வட்டாரக்கிளை
தமிழ் அரசு வாலிபர் முன்னணி வடமராட்சி.

(C-5272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.